Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
STC NO.419/2023

**Depositions of PW- 4**

| Name | **திரு.ராஜகோபால்** | Occupation | சமூக நல குழும உறுப்பினர் |
|---|---|---|---|
| Father's name | பால்ராஜ் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of March 2026.

02.03.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் சமூக நல குழும உறுப்பினராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இதற்கு முன்பு விருதுநகர் குழந்தைகள் நல குழும உறுப்பினராக பணிபுரிந்தபோது கடந்த 28.12.2022 அன்று நானும், தொழிலாளர் உதவிஆய்வாளர் துர்கா என்பவரும், Childline ல் பணிபுரியும் அன்பு செல்வி என்பவரும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து சாந்தி என்பவரும் ரோந்து சென்றபோது ஆனந்தா பேக்கரியில் ஒரு சிறுவன் பொருட்கள் எடுத்துக்கொடுத்து கொண்டிருந்தார். அவரை பார்த்தபோது 18 வயதிற்குட்பட்ட சிறுவன்போல் தெரிந்தது. ஆனால் அந்த கடையிலிருந்த மற்றொரு நபர் ஒருவர் மேற்படி சிறுவனுக்கு 18 வயதிற்கு மேல் ஆகிவிட்டதாக எங்களிடம் கூறினார். அது தொடர்பான ஆவணங்களையும் எங்களிடம் தருவதாக கூறினார். நாங்களும் அதன் பின் மற்ற இடங்களுக்கு ரோந்து சென்றோம். ஆனால் மேற்படி சிறுவனின் வயது சான்றிதழை தரவில்லை என்று தொழிலாளர் உதவி ஆய்வாளர் கூறினார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நானும் மேற்படி துர்கா என்பவரும் சேர்ந்து தான் ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் தொழிலாளர் நல அலுவலகத்திலிருந்து சேர்ந்து தான் ரோந்து பணிக்கு புறப்பட்டோம். நாங்கள் மேற்படி பேக்கரிக்கு சென்றபோது நேரம் சுமார் காலை 11.30 மணி இருக்கும். மேற்படி நாங்கள் பேக்கரியில் பார்த்ததாக கூறப்படும் நபர் பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்தார். அவர் என்ன பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டிருந்தார் என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. நான் கடந்த 1985 லிருந்து திருவில்லிபுத்தூரில் வசித்து வருகிறேன். மேற்படி ஆனந்தா பேக்கரியை ஏற்கனவே எனக்கு தெரியும் என்றால் சரிதான் நான் பொருட்கள் வாங்க அங்கு செல்வதால் எனக்கு தெரியும்.

மேற்படி பேக்கரியில் கண்காணிப்பு கேமராக்கள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பேக்கரியில் கண்காணிப்பு கேமராக்கள் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பேக்கரியில் எத்தனை வருடங்களாக நான் பொருட்கள் வாங்கி வருகிறேன் என்றால் சிறுவயதிலிருந்தே பொருட்கள் வாங்கி வருகிறேன். மேற்படி பேக்கரியில் நான் பார்த்ததாக கூறப்படும் பையனை மேற்படி தேதியில் தான் பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி பையனை அப்போதே விசாரித்தோமா என்றால் அதுசம்மந்தமாக நடவடிக்கைகளை தொழிலாளர் நலத்துறையினர்கள் தான் மேற்கொள்வார்கள் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பேக்கரியின் அருகேயுள்ள கடைகளில் விசாரணை மேற்கொண்டோமா என்றால் அதுபற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. மேற்படி பையனை அதன் பின்பு விசாரணை செய்தோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி தேதியில் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பேக்கரியிலிருந்த வேறு நபர்களை விசாரணை செய்தோமா என்றால் இல்லை.

இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆஜர்எதிரியின் கடையில் மேற்படி வேலை செய்வதாக கூறப்படும் பையன் வேலை செய்ததற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் அது எனது பணி இல்லை. விசாரணை செய்தபோது அந்த இடத்தில் வைத்து ஏதேனும் ஆவணம் தயார் செய்யப்பட்டதா என்றால் பொதுவாக சம்பவயிடத்தில் வைத்து குழந்தையின் விவரங்கள் போன்றவை படிவத்தில் பூர்த்தி செய்யப்படும். இவ்வழக்கில் மேற்படி படிவம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அதற்கும் எனக்கும் சம்மந்தமில்லை. மேற்படி கடையில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றாலும் எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி கடையில் கண்காணிப்பு கேமரா இல்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று மேற்படி பேக்கரிக்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சென்றிருந்தால் உரிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் செல்லாததால் தான் நியாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.